**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

**1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியம இலக்கம் 01 இன் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்டவை தவிர்ந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும் திறன் அபிவிருத்தித் திட்டத்திற்கான ரூபா 2,767,628 ஆன பெறவேண்டிய மிகுதியொன்று அத்திட்டத்திற்கான செலுத்த வேண்டிய மிகுதியொன்றுக்கு எதிரீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பயிற்சித் திட்டங்களில் பெறப்படும் வருமானம் கணக்குகளில் சீராக்குவதற்காக செலுத்த வேண்டிய மிகுதி மற்றும் பெற வேண்டிய மிகுதிக்கான கணக்கிற்கு சீராக்கப்பட்டு வருமானம் இனங்காணப்பட்டமையால் இச்செலுத்த வேண்டிய மிகுதி மற்றும் பெற வேண்டிய மிகுதி என்பன எதிரீடு செய்யப்படுவதால் நிதிக்கூற்றுக்களின் விளைவுகளில் தாக்கம் ஏற்படமாட்டாது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது நியம இலக்கம் 02 இற்கு முரணாக முன்னைய வருடத்தின் நடைமுறை வேலைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,644,344 ஆனது மீளாய்வாண்டில் செலவிடப்பட்டதாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்ததுடன் முற்றாக பெறுமானத் தேய்விடப்பட்ட கிரயம் ரூபா 5,815,051 ஆன சொத்துக்கள் இலங்கை இராணுவத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தும் காசு வெளிப்பாய்ச்சலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய வருடத்தின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 1,644,344 ஆன தொகை குறைவடைந்தமை இவ்வாறாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டதுடன் இராணுவத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 5,815,051 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மொத்த நிலையான சொத்துக்களுக்கு சீராக்கப்பட்டு நிலையான சொத்துக்களின் தேறிய வேறுபாடு காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | காசு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல் என்பன சரியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (இ) | முற்றாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த ஆனால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 171,405,969 ஆன | நிலையான சொத்துக்களின் மதிப்பு மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கான | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| நிலையான சொத்துக்களுக்கு பயனுள்ள ஆயுட்காலம் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீண்டும் மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொள்வனவு செய்யப்பட்ட விபரங்கள் குறிப்பிடப்படாத மின் உற்பத்தி இயந்திரமொன்று தற்போது பயன்படுத்தப்படுவதுடன் அவ் இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் ரூபா 400,000 விலைக்கு வாங்கப்பட்ட வைரஸ் தடுப்பு மென்பொருளொன்று மூலதனமாக்கப்படாது மீளாய்வாண்டில் வருமானச் செலவொன்றாக வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது. | மீள் மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ரூபா 400,000 செலவானது போதுமானதாகக் கருதப்பட்டு வருமானச் செலவாக கணக்கிடப்பட்டது. | மின் உற்பத்தி இயந்திரத்தின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டியதுடன் மூலதனச் செலவுகள் சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) அரச உத்தியோகத்தர்கள் பெருமளவில் உள்ளடங்கலாக 147 பேரின் பட்டப்பின் படிப்பு கல்விக் கற்கை நெறிக் கட்டணம் மற்றும் ஆங்கிலச் செயற்திட்டக் கட்டணமாக 01 வருடத்திலிருந்து 05 வருடங்கள் வரையிலான காலப்பகுதியில் ரூபா 12,673,661 அறவிட வேண்டியதாக காணப்பட்டது. விண்ணப்பதாரிகள் கற்கை நெறியைப் பூரணப்படுத்தாது | 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் பதிவழிக்கப்பட்டிருந்த மிகுதி ரூபா 10,812,000 மற்றும் மொத்தப் பிரிவின் பெற வேண்டிய மிகுதியில் பதவழிக்கப்பட்டிருந்த ரூபா 1,383,650 முறையான அனுமதியையும் பெற்றுக் கொள்ளாது பதிவழிக்கப்பட்டதாக 2020 நிதிக்கூற்றுக்களில் மீண்டும் சீராக்கப்பட்டது. இம்மிகுதி | இம்மீதியை அறவிடு வதற்கான மற்றும் முறையான அனுமதியின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கைவிட்டு விடுவதால் இத்தொகையை அறவிடுதல் சந்தேகத்திற்குரியது. | முறையான அனுமதியுடன் பதிவழிக்கப்படுவதற்காக குறிப்பிட்ட பிரிவுகளிடமிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் காணப்படும் நிலைமைக்கேற்ப மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | மின் உற்பத்தி இயந்திரத்தைப் பழுது பார்த்தமைக்காக செலுத்த வேண்டிய ரூபா 530,532 ஆன தொகைக்காக அட்டுறுச் செலவு ஒதுக்கங்கள் கணக்கிடப்படாமையால் மீளாய்வாண்டில் மிகையானது அத்தொகையினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | திருத்த வேலைகள் இனங்காணப்பட்ட பின்னர் மதிப்பீடு வழங்கப்பட்டிருந்ததால் அது தொடர்பான உணர்ச்சிப் பாகங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வரை அதை முடிப்பதற்கு முடியவில்லை.அப்பணி 2021 ஆம் ஆண்டில் முறையாக முடிவடைந்தது. அப்பழுதுபார்த்தலை மேற்கொள்வதிலான நிச்சயமற்ற தன்மையே அதற்குக் காரணமாக இருந்தது. | அட்டுறுச் செலவுகள் சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | சம்பந்தப்பட்ட அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | | |
| நுவரெலியா சுற்றுலா விடுதி | 7,206,736 | 8,833,328 | 1,626,592 | சரிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அத்துடன் அதனுடன் சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் காட்டப்படுதல் வேண்டும். |
| பெற வேண்டிய விடுதி | 558,615 | 301,525 | 257,090 | சரிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் அத்துடன் அதனுடன் |

| | | |
|---|---|---|
| வருமானம் | | சம்பந்தப்பட்ட அறிக்கைகளில் காட்டப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிடமிருந்து பெற வேண்டிய 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 7,610,160 ஆன மிகுதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான மிகுதியொன்று செலுத்துவதற்கு உள்ளபடியாக அமைச்சின் நிதிக் கூற்றுக்களில் சான்றுப்படுத்தப்படவில்லை. | இப்பணம் தற்போது உண்மையில் பெற வேண்டிய பணமல்ல என்பதால் அக்கணக்குகளைப் பதிவழிப்பதற்கு ஆளுநர் சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ உதவியாளர் டிப்ளோமா செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 416,000 ஆன செலுத்த வேண்டிய மிகுதியொன்று தீர்க்கப்படாது கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | முகாமைத்துவ உதவியாளர் டிப்ளோமா செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட ரூபா 416,000.00 ஆன தொகை தொடர்பான செலுத்தல் அறிக்கை குறிப்பிட்ட பிரிவினால் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் இத்தொகை தொடர்ந்தும் செலுத்த வேண்டிய மிகுதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது. | தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்காளர் சேவையின் பயிற்சி வேலைத் திட்டத்திற்காக செலுத்த வேண்டிய மிகுதியாக காட்டப்பட்டுள்ள 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,094,163 ஆன மிகுதி | ஏனைய செலுத்த வேண்டிய மிகுதிகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 2,094,163.00 ஆன தொகை 2008 இலங்கை கணக்காளர் சேவையின் ஆரம்ப பயிற்சி வேலைத்திட்டத்திற்கான | செலுத்த வேண்டிய மிகுதிகள் தீர்க்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | |
|---|---|---|
| அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் நிதி அமைச்சிற்கோ செலுத்தப்பட்டு தீர்க்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய மிகுதியாகும். அத்திட்டத்திற்குரிய சகல செலவுகளும் இற்றை வரையில் செலுத்தப்பட்டு முடிவுற்றுள்ளதாக சான்றுப்படுத்துவதற்காக குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் இத்தொகை அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு மற்றும் நிதி அமைச்சிற்கும் செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டதன் படி அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 10(05) ஆம் பிரிவு | ஒதுக்கீட்டிற்கு பின்னர் மிகுதியான தேறிய வருமானம் மீண்டும் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்வரும் வருடங்களில் உழைக்கப்படுகின்ற தேறிய மிகை வருமானத்தை ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சட்டத்தின் பிரகாரம் தேறிய வருமானம் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் பொருட் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பொருட் கணிப்பீட்டு அறிக்கை குறிப்பிட்ட திகதியில் சமர்ப்பிக்கப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட் கணிப்பீட்டு அறிக்கை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | i. சுற்றறிக்கைப் பிரகாரம் சொத்துப் பதிவேடொன்று நாளது வரையாக்கப்பட்டு பராமரிக்கப்படவில்லை. | கணக்காய்வின் போது நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்ட நாளதுவரையாக்கலிளுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டுக் கொண்டிருந்தது. | நிலையான சொத்துப் பதிவேட்டின் குறைபாடுகள் திருத்தப்பட்டதாக பதில் அளிக்கப் பட்டிருந்த போதிலும் மீண்டும் பரிசோதிக்கப்பட்ட போது அவ்வாறு நடைபெற்று இருக்கவில்லை. |
| | | ii. வருடத்திற்குள் ரூபா 5,815,050 பெறுமதியான சொத்துக்கள் நீக்கப்பட்டிருந்த போதிலும் நீக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சொத்துக்களின் கிரயம் உறுதிப்படுத்தப் படக்கூடிய வகையில் நிலையான சொத்துப் பதிவேடு பராமரிக்கப்பட்டு வருதல் வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.3 ஆம் பிரிவு | ஊக்கத்தொகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டில் ரூபா 3,202,850 ஆனது நிறுவகத்தின் பதவியணியினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இது முறையான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு அன்று அரச நிதித் திணைக்களத்தின் IAD/GA8/5/2/10 ஆம் இலக்க மற்றும் 2007.12.17 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான பதவியணியினருக்காக கொடுப்பனவு அங்கீகாரத்தின் பிரகாரம் இத்தொகை வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறை வங்கி கணக்குகள் இரண்டில் தினமொன்றுக்கு ரூபா ஒரு மில்லியனுக்கு கிட்டிய சாதாரண மிகுதியொன்று விளைவற்றதாகப் பேணப்பட்டு வருவதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அம்மிகுதி ரூபா 24,462,466 ஆக இருந்தது. | குறைந்தபட்ச தெகை மிகுதியொன்று பேணப்பட்டு வருவதற்காக மிகைப் பணம் குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மிகைப் பண மிகுதி குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்யப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 17,301,487 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 19,817,697 ஆகும். நிதி விளைவுகளில் ரூபா 2,516,210 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மூலதன மானியம் ரூபா 3,133,584 ஆல் குறைவடைந்தமை மற்றும் COVID 19 காரணத்தினால் வருமானம் நூற்றுக்கு 26 வீதத்தினால் குறைவடைந்தமை என்பன பிரதானமான காரணங்களாக இருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் கடந்த 05 வருடங்களாகத் தொடர்ந்தும் குறைவடைந்திருந்தது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதம் அத்துடன் விரைவு விகிதங்களில் குறிப்பிட்டளவு அதிகரிப்பொன்று மீளாய்வாண்டில் காட்டப்பட்டிருந்தது.

| | 2020 | 2021 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 0.68:1 | 0.52:1 |
| விரைவு விகிதம் | 0.62:1 | 0.45:1 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2008-2010 காலப்பகுதிக்கான பட்டப்பின்படிப்பு கற்கைநெறிக்கு 2014 ஆம் ஆண்டில் பட்டமளிப்பு விழா நடைபெற்று முடிவடைந்திருந்தது. எனினும், இப்பட்டப்படிப்பிற்காக | பட்டப்பின் படிப்புக் செயற்திட்டத்தில் கொடுப்பனவு 2007 அக்டோபர் 01 ஆந் திகதி ஆளுநர் சபையினால் அனுமதிக்கப்பட்டு மற்றும் | திறைசேரி அனுமதி பெறப்பட்டு வெளியார் சேவைக்கான விதிமுறைக் |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டில் அறிக்கையொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்படுவதற்காக ரூபா 1,432,463 பதவியணியினருக்கு முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவுத் திட்டம் மற்றும் விநியோகக் குழுவின் அங்கீகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இவ்வாறாக திட்டமிடல் மற்றும் விநியோகக் குழுவின் மூலம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படுதல் தொடர்பாக திறைசேரியினால் வழங்கப்பட்ட வெளியார் சேவைகளுக்கான விதிமுறைக் கோவையில் (Rules relating to external services) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2017.05.03 ஆந் திகதி திருத்தப்பட்ட கொடுப்பனவு நடைமுறைகளின் (Rules Related to external services provided by SLIDA) பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. | கோவையின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2013 பெப்ரவரி 07 ஆந் திகதிய 13/0150/523/005 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனம் நிறுவப்பட்டிருந்த சட்டம் திருத்தியமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அத்தீர்மானம் வழங்கப்பட்டு 07 வருடங்கள் கடந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டத்தில் பல்வேறு சர்ந்தப்பங்களில் இனங்காணப்பட்ட வேறுபாடுகள் உள்ளடக்கப்பட்டு திருத்தப்படுவதற்கு தற்போது சட்டவரைபுகள் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சட்டம் திருத்தப்பட வேண்டும். |

## 3.2 செயலற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சங்கதரணி ஆராய்ச்சி மத்திய நிலையம் ரூபா 3,443,672 செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. அம்மத்திய நிலையம் ஆராய்ச்சி மத்திய நிலையமாகப் | கடந்த வருடத்தில் மார்ச் மாதத்தில் தொடங்கி இற்றைவரையில் தொடர்ந்து காணப்பட்டு வருகின்ற கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக | சங்கதரனி மத்திய நிலையம் நிறுவப்பட்ட நோக்கத்திற் காகப் பயன்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாது மத்திய நிலையம் மற்றும் அதன் உபகரணங்கள் நிறுவகத்தின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதனால் மத்திய நிலையம் நிறுவப்பட்ட நோக்கத்திற்கு முரணான நடவடிக்கையொன்றுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவகத்தில் பயிற்சி நடவக்கைகள் தொடர்ந்து நடாத்தப்படும் போது சங்கதரணி ஆராய்ச்சி மத்திய நிலையம் கலாச்சார ஆய்வுகள் மற்றும் பழக்கமான வகுப்பறைகளாக மிகவும் பயனுள்ளதாகப் பயன்படுத்தப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) | மின் உற்பத்தி இயந்திரத்திற்குத் தேவையான எரிபொருளை களஞ்சியப் படுத்துவதற்காக 10000 லீட்டர் கொள்ளளவுடைய ஒரு எரிபொருள் தாங்கியொன்று நிறுவப்பட்டிருந்ததுடன் கூட்டுத் தாபனத்திடமிருந்து எரிபொருள் பெறப்படும் போது 6000 லீட்டர் ஒரு முறையில் பெற வேண்டிய காரணத்தினால் அந்த அளவு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த எரிபொருள் இருப்பில் மேலும் 2784 லீட்டர் எரிபொருள் மிகுதியாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் வருடாந்தம் சராசரி எரிப்பின் பிரகாரம் இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேல் போதுமானதாக இருக்கும் என அவதானிக்கப்பட்டதுடன் தற்போது இந்த எரிபொருள் இருப்பு பாவிக்கப்படாத நிலையில் காணப்பட்டது. | இந்த மின் உற்பத்தி முறைமை கொள்வனவு செய்யப்பட்டமை இலங்கை பூராகவும் பகல் நேரத்தில் மின்வெட்டு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் ஆகும். ஒரு மின் உற்பத்தி இயந்திரத்தினால் மொத்த அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வளாகத்திற்கும் மின்சாரம் வழங்கப்படுவதற்கு போதுமான திறன் கொண்ட இயந்திரமொன்றை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | எரிபொருள் களஞ்சியப் படுத்துவதற்கு மாற்று முறை ஒன்றைப் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | நிறுவகத்திற்குச் சொந்தமான 05 உத்தியோகபூர்வ மனைகள் பயன்படுத்தப்படாமல் விளைவற்றதாகக் காணப்பட்டன. | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு உத்தியோகபூர்வ மனைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போது பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளின் பிரகாரம் பொருத்தமானவர்களுக்கு உத்தியோகபூர்வ மனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகபூர்வ மனைகள் முறையான விதத்தில் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2013 ஏப்ரல் 19 ஆந் திகதிய அமப/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி இரண்டாம் நிலைக் கல்விசார் ஊழியர்களுக்கு நூற்றுக்கு 50 வீதமான இரண்டாம் நிலைக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு செலுத்துவதற்காக 2014 நவம்பர் 14 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுவில் மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய குறைந்த பட்ச விரிவுரைகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை 45 மணித்தியாலங்களாக இருக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அத்தீர்மானத்திற்கு முரணாக, 2015 யூலை மாதத்திலிருந்து 2020 திசெம்பர் வரையில் குறைந்தபட்ச விரிவுரைகளின் மணித்தியால எண்ணிக்கையை கவனத்திற் கொள்ளாது விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகையான ரூபா 9,389,325 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிறுவகத்தின் சேவைகள் வழங்கல் செயன் முறைகளின் தரத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் எவ்வாறு செயற்படுத்த வேண்டுமென்பது கவனத்திற் கொள்ளப்பட்டு வருகின்றது. | பொது முயற்சிகள் குழுவின் முடிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அதிகமாகச் செலுத்தப்பட்ட விரிவுரைக் கட்டணங்கள் மீண்டும் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் மூலதன மானியக் கணக்கின் மிகுதி ரூபா 34,147,488 என்பதுடன் மீளாய்வாண்டில் மூலதன மானியங்களில் ரூபா 6,278,667 பயன்படுத்தப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 வரையில் பயன்படுத்தப்படாத மிகுதி ரூபா 36,068,820 ஆகும். | குறைந்தபட்ச தொகை மிகுதியொன்று பேணப்படுவதற்காக மேலதிக தொகை குறுங்கால வைப்புக்களில் முதலீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகத் தொகையைப் பயன்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 166 என்பதுடன் உள்ளபடியான பதவியணியினர் 104 ஆக இருப்பதுடன் 62 பதவிகளுக்காக வெற்றிடங்கள் காணப்படுகின்றன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது தேவையான பதவிகளுக்காக அங்கீகரிக்கப் பட்ட பதவியணியினர் திருத்தங்கள் மேற்கொள்வதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டின் செலவு மற்றும் உள்ளபடியான செலவு என்பவற்றுக்கிடையே நூற்றுக்கு 13 வீதத்திலிருந்து நூற்றுக்கு 433 வீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டன. மேலும் மீளாய்வாண்டின் இறுதிக்குப் பின்னர் பாதீடு திருத்தப்பட்டிருந்தமையால் பாதீடானது நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவும் நிச்சயமற்ற நிலைமையின் கீழ் கற்பனை வருமான நிலைமைகளில் ஏற்பட்ட வேறுபாடு விரிவுரைகள் மண்டப வருமானம், இதர வருமானம், மதியுரைச் சேவைகள் மற்றும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிப்பிரிவின் வருமானம் என்பவற்றில் முரண்கள் ஏற்பட்டிருந்தன. | பாதீடானது உள்ளகக் கட்டுப்பாட்டுக் கருவி யொன்றாகப் பயன்படுத்தப் படல் வேண்டும். |